# பரீட்சகரின் அறிக்கை

## AA1 பரீட்சை – 2015 யு‘லை

## (AA11) நிதிக் கணக்கீட்டு அடிப்படைகள்

---

### பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

**வினா இல. 01** – 40 புள்ளிகள்

இந்த வினா முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கிய 18 உப வினாக்களைக் கொண்டுள்ள துடன் சிலரைத் தவிர சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்கு விடையளித்திருந்தனர். 50% இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமானவற்றைப் பெற்றிருக்கின்றனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அளித்த விடைகளுக்கு இணங்க, கணக்கீட்டின் அடிப்படை மூலங்கள் மீதான அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இந்த வினாவுக்கான விடைகளை மதிப்பீடு செய்யும்போது பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) அதிகமான பரீட்சார்த்திகள் நிதிக் கணக்கீடு மற்றும் முகாமைத்துவக் கணக்கீடு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு பற்றி விளங்கிக் கொண்டிருக்கவில்லை. எனவே மிகச் சொற்பளவிலான பரீட்சார்த்திகளே வினா இலக்கம் 1.2 இற்காக சரியான விடையினைத் தெரிவு செய்திருந்தனர்.

(2) ஒரு குறிப்பிட்ட திகதியில் நிறுவனத்தின் நிதி நிலைமையை பிரதிபலிப்பதற்கு “நிதி நிலைக் கூற்று” தயாரிக்கப்படுகிறது என்பது பற்றிய விளக்கமின்றி இருந்த பரீட்சார்த்திகள் பிழையான விடையினைத் தெரிவு செய்திருந்தனர்.

(3) வினா இல. 1.10 மற்றும் 1.11 இல் தரப்பட்ட கூற்றுக்கள் “சரியானதா”, “பிழையானதா” எனக் கூறும்படி கேட்கப்பட்டபோது, பல பரீட்சார்த்திகள் அந்தக் கூற்றுக்களைச் சரியாக விளங்கிக் கொள்ளமை அவதானிக்கப்பட்டது. அவர்களில் அதிகமானவர்கள் வினா இலக்கம் 1.11 இல் தரப்பட்ட கூற்று “பிழையானது” எனக் கூறியிருந்தனர்.

(4) “உண்மையான கணக்கு”, “தனிநபர் கணக்கு” மற்றும் “பெயரளவுக் கணக்கு” ஆகியவற்றைச் சரியாக அடையாளங் காண்பதற்கான முறையான விளக்கத்தைப் பல பரீட்சார்த்திகள் கொண்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(5) அதிகமான பரீட்சார்த்திகள் வினா இலக்கம் 1.14 உடன் தொடர்புபட்ட கணக்கீட்டு எண்ணக்கருக்களை அடையாளங் காண்பதில் தோல்வியடைந்திருந்ததுடன் 10 % மான பரீட்சார்த்திகள் மட்டுமே சரியான விடையினை அளித்திருந்தனர். இந்த வினாவுக்கு அளிக்கப்பட்ட பிழையான விடைகள், கணக்கீட்டு எண்ணக்கருக்கள் மீது பரீட்சார்த்திகள் குறைந்த அறிவினைக் கொண்டிருப்பதையே மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

(6) சில பரீட்சார்த்திகள் செலவுகளை, மூலதனச் செலவுகளாகவும் வருமானச் செலவுகளாகவும் வகைப்படுத்துவதில் விளக்கமின்மை காரணமாக தோல்வியடைந்திருந்தனர்.

(7) வினா இல. 1.17 இல், சிறு செலவுக்காசு கட்டுத்தொகை (Petty cash float) மீது போதியளவு விளக்கத்தைக் கொண்டிராத காரணத்தால், பெரும்பாலான பரீட்சார்த்திகள் மீளளிப்பான வருமதித் (பெறத்தக்க) தொகையினைச் சரியாகக் கணிப்பதில் தோல்வி கண்டிருந்தனர்.

(8) வினா இல. 1.18 இல், பொதுத் தேவை நிதிக் கூற்றுக்களின் தரம்சார் சிறப்பம்சங்கள் மிகச் சொற்பளவிலான மாணவர்களாலேயே சரியாக எழுதப்பட்டிருப்பதானது இந்தப் பகுதியில் பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் அடிமட்டத்தில் இருப்பதையே காட்டுகிறது.

(9) சில பரீட்சார்த்திகள் வினா இலக்கம் 1 தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை முறையாக வாசிக்காமல் தாமாகவே வினாப்பத்திரத்தில் விடைகளை குறித்திருந்தனர். விடைக்குரிய இலக்கத்தினை எழுதுவதற்குப் பதிலாக, தேர்வு செய்யப்பட்ட விடை முழுமையாக எழுதப்பட்டிருந்த சம்பவங்களும் காணப்பட்டன. இதனால் பரீட்சார்த்திகள் அவர்களுடைய நேரத்தை வீணடித்துள்ளனர்.

## பகுதி B

**வினா இல. 02** - 08 புள்ளிகள்

இந்த வினாவானது வளங்கள், வியாபார உடைமையாளர்கள் மற்றும் அவர்களது பிணைகள், வளங்களை வழங்கல் செய்பவர்கள், வியாபாரத்தைக் கொண்டிருப்பவர்கள் ஆகியோருக்கு இடையிலான தொடர்புடைமையைச் எடுத்தியம்புகின்ற கணக்கீட்டுச் சமன்பாடு மீதான அறிவினைச் சோதிப்பதற்கான நோக்கத்தினைக் கொண்டிருந்தது. இந்த வினாவுக்கு சகல பரீட்சார்த்திகளும் விடையளிக்க முனைந்திருந்தனராயினும் அவர்களில் பலர் ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் இருந்து உயர்ந்தபட்சப் புள்ளிகளைப் பெறுவதில் தோல்வி கண்டிருந்தனர். பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) முதலாவது ஊடுசெயலில் (கொடுக்கல் வாங்கல்) உள்ளடக்கப்பட்டிருந்த **சனத்** என்பவரால் வைப்புச் செய்யப்பட்ட பணத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூ.250,000/- பெறுமதியான பொருட்களை, வியாபாரத்திற்காக **சனத்** என்பவரால் வாங்கப்பட்ட ஒரு இருப்பாகக் கருதி, வேறாக மூலதனத்திற்கு சீராக்கம் செய்திருந்தமையை சில பரீட்சார்த்திகள் விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

(2) வினாவின் இறுதியில் தரப்பட்ட சமன்பாட்டில் வருமானம் மற்றும் செலவுகளுக்கான ஒரு நிரல் வேறாக உள்ளடக்கப்பட்டிருந்ததாயினும் இந்த வருமானம் மற்றும் செலவுகள் கருத்தில் எடுக்கப்படாமல் மூலதனத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தன.

(3) பெறுமதிகளை எழுதும்போது, அவை ஆயிரங்களில் அல்லது முழுமையான பெறுமதியில் காட்டப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் இந்த வினாவுடன் தொடர்புபட்ட ஊடுசெயல்களை இந்த இரு முறைகளிலும் பதிவு செய்திருந்தனர்.

(4) விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் கிரயம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(5) கணக்கீட்டுச் சமன்பாடு என்ன என்பதை விளங்கிக் கொள்வதில் சில பரீட்சார்த்திகளிடம் காணப்பட்ட போதிய அறிவின்மை காரணமாக அவர்கள் பரீட்சை மீதியையும் தயாரித்திருந்தனர்.

**வினா இல. 03** - 08 புள்ளிகள்

இந்த வினா தொங்கற் கணக்கு ஒன்றில் பதிவுசெய்யப்பட்ட பரீட்சை மீதி ஒன்றின் வேறுபாட்டு வழுக்களைத் திருத்துவதன் மூலம் தொங்கற் கணக்கினைச் சீர்செய்தல் மீதான அறிவினைப் பரீட்சிக்கிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு வெற்றிகரமாக விடை அளித்திருப்பதுடன் சில பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கின்றனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் குறைந்தளவிலான புள்ளிகளையே பெற்றிருந்தனர். அதற்கான பொதுவான பலவீனங்களாக பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(1) வழுக்களைத் திருத்தம் செய்த பின்னர் தொங்கற் கணக்கு சரிசெய்யப்பட்டிருக்கும் என்பதை சில பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளவில்லை. எனவேதான், வழுக்களைத் திருத்தம் செய்த பின்னரும் தொங்கற் கணக்கின் மீதி முன்கொண்டு செல்லப்பட்ட சம்பவங்களைக் காணக்கூடியதாக இருந்தது.

(2) பல பரீட்சார்த்திகள், பல்லின (நானாவித) செலவாகத் தவறுதலாகப் பதிவுசெய்யப்பட்டிருந்த பல்லின வருமானத்திற்கான சரியான நாட்குறிப்புப் பதிவினைக் காட்டத் தவறியிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள், நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரிப்பதற்கும் பதிலாக, பேரேட்டுக் கணக்குகளுடன் பரீட்சை மீதியையும்கூடத் தயாரித்திருந்தனர்.

**வினா இல. 04** - 08 புள்ளிகள்

இந்த வினா இரட்டைப் பதிவு முறைமை மற்றும் கணக்குப் பதிவு மீதான அறிவினைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளித்து ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அதிகமானவற்றைப் பெற்றிருந்தனர். பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) சில பரீட்சார்த்திகள் பரீட்சை மீதியைச் சரியாகத் தயாரிப்பதில் தோல்வி கண்டிருந்தனர்.

(2) பல பரீட்சார்த்திகள் ஏனைய பேரேட்டுக் கணக்குகளைச் சரியாகத் தயாரித்திருந்த போதிலும் அவர்கள் இரட்டை நிரல் காசேட்டினைச் சரியாகத் தயாரிப்பதில் தோல்வி கண்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் இரட்டைப் பதிவுக் கோட்பாடுகள் மீது சரியான விளக்கத்தினைக் கொண்டிருக்கவில்லை.

(4) வினாவானது பொதுப் பேரேட்டினைத் தயாரிக்குமாறு தெளிவாகக் கேட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக வாசிக்காமல் பேரேட்டுக் கணக்குகளுக்குப் பதிலாக நாட்குறிப்புப் பதிவுகளைத் தயாரித்திருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் பொதுப் பேரேட்டினைத் தயாரிக்காமல் பரீட்சை மீதியை மட்டும் தயாரித்திருந்த சந்தர்ப்பங்களும் உள்ளன. எவ்வாறாயினும், அத்தகைய பரீட்சார்த்தி களுக்கு பொருத்தமானவாறு புள்ளிகள் வழங்கப்பட்டன.

**வினா இல. 05** - 08 புள்ளிகள்

இந்த வினாவானது மூலதனமாக்கப்பட வேண்டிய கிரயத்தைக் கணித்தல், தேய்மானம் செய்யத்தக்க பெறுமதி, சொத்து ஒன்றின் வருடாந்த தேய்மானக் கட்டணம் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்தல் ஆகியவற்றின் மீதான அறிவினைப் பரீட்சிக்கிறது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை. விடையளித்த வர்கள்கூட குறைவான புள்ளிகளையே பெற்றிருந்தனர். இந்த வினாவுக்கு அளிக்கப்பட்ட விடைகளிலிருந்து பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) மூலதனமாக்கப்பட வேண்டிய இயந்திரங்களின் கிரயத்தினைக் கணிக்கும்போது, அதிகளவானவர்கள் கொள்வனவு விலையில் உள்ளடக்கப்பட்டிருந்த மீளப்பெறத்தக்க பெறுமதி சேர் வரியினை (VAT) கழித்திருக்கவில்லை.

(2) ஒரு சொத்து மூலதனமாக்கப்படும்போது பயன்படுத்தத்தக்க நிலமை வரையில் உள்ள சகல செலவுகளும் கருத்திலெடுக்கப்படுதல் வேண்டும் என்பதைப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் விளங்கிக் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

(3) இயந்திரத்தின் தேய்மானம் செய்யத்தக்க பெறுமதியினைக் கணிக்கும்போது உட்படுத்தப்பட வேண்டிய விற்பனைச் செலவுகள், மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும் என்ற விடயத்தினை விளங்கிக் கொள்ளாததன் காரணமாக பல பரீட்சார்த்திகள் தேய்மானம் செய்யத்தக்க பெறுமதியினைச் சரியாகக் கணிப்பதில் தோல்வி கண்டிருந்தனர்.

## பகுதி C

**வினா இல. 06** - 14 புள்ளிகள்

தனியுரிமை நிறுவனமொன்றின் முடிவுக் கணக்குகளைத் தயாரிப்பதற்குரிய ஆற்றலைச் சோதிப்பதற்கான சில சீராக்கங்களுடன்கூடிய ஒரு இலகுவான வினாவாக இது இருக்கிறது. சிலரைத் தவிர ஏனைய சகல பரீட்சார்த்திகளும் இந்த வினாவுக்கு விடையளிக்க முனைந்திருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுமையாக விடையளித்திருந்ததுடன் சிலர் சில பகுதிகளுக்கு மாத்திரம் விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், அதிகளவிலான பரீட்சார்த்திகள் கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தனர். இருந்தபோதிலும், இந்த வினாவுக்கான விடைகளுக்கு புள்ளியிடும்போது பின்வரும் பொதுவான பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(1) இருப்பின் (தொக்கின்) பெறுமதி கிரயத்தினை விட அல்லது நிகர தேறுகைப் பெறுமதியை (NRV) விடக் குறைவாக இருக்க வேண்டும் என்ற போதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் நிகர தேறுகைப் பெறுமதியினை (உயர் பெறுமதி) இருப்புப் பெறுமதியாகச் சீராக்கம் செய்திருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள் நிலையான வைப்புகள் மீதான வட்டியைச் சரியாகக் கணித்திருந்த போதிலும் அதனைச் சரியாகக் கணக்கீடு செய்வதற்குத் தவறியிருந்தனர். சிலர் நிலையான வைப்பு மீதான வட்டியினை ஒரு வருமானமாக அடையாளங் கண்டிருந்த போதிலும் அவர்கள் அதனை வட்டி வருமதியாக (பெறத்தக்க)க் கணக்கீடு செய்யவில்லை.

(3) பல பரீட்சார்த்திகள் ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டினைச் சரியாகக் கணக்கீடு செய்யத் தவறியிருந்தனர். இங்கு, ஐயக்கடன்களுக்கான ஏற்பாட்டின் அதிகரிப்பு சரியாக அடையாளங் காணப்படாதிருந்ததுடன், அதிகரிப்பு மட்டும் ஒரு கீழ் ஏற்பாடாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் என்பதும் விளங்கிக் கொள்ளப்படவில்லை.

(4) நிலையான வைப்பு மீதியினைக் கணக்கீடு செய்யும்போது, சில பரீட்சார்த்திகள் மூலதனப் பகுதியினை நீண்ட கால பரிப்புகளின் கீழும் வட்டி வருமானத்தை வருமானத்தின் கீழும் வட்டி வருமதியினை (பெறத்தக்க) நடைமுறைப் பரிப்புகளின் கீழும் பதிவு செய்திருந்தனர்.

(5) வங்கி மேலதிகப் பற்று நடைமுறைப் பரிப்பின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது நடைமுறைச் சொத்துகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமையைக் காணக் கூடியதாக இருந்தது.

(6) சிலரைத் தவிர அதிகளவான பரீட்சார்த்திகள் விடையினைப் பு‘ரணப்படுத்தவில்லை. சிலர் விடையின் பல பகுதிகளைப் பு‘ரணப்படுத்தியிருந்தனர். இன்னும் சிலர் சம்பந்தப்பட்ட உருப்படிகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியிருந்தனராயினும் இறுதி வெளியீட்டைக் கணிப்பிடவில்லை.

**வினா இல. 07** - 14 புள்ளிகள்

இந்த வினா உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பதன் மீதுள்ள அறிவினைப் பரீட்சிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இது இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்ததுடன் முதலாவது பகுதியானது உற்பத்திக் கணக்கினைத் தயாரித்து உற்பத்தியின் மொத்தக் கிரயத்தைக் கணிப்பீடு செய்வதைச் சோதிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது பகுதியானது 25% மிகை விலையுடன் பொருட்கள் விற்பனைப் பிரிவுக்கு மாற்றப்படும் பெறுமதியினைக் கணிப்பதைச் சோதிக்கின்றது.

கணிசமான அளவு பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்காக அதிகளவான புள்ளிகளைப் பெற்றிருந்த போதிலும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு விடையளிக்கவில்லை.

ஒட்டுமொத்த பரீட்சார்த்திகளையும் நோக்கும்போது இந்த வினாவுக்கு விடையளித்தமையானது வெற்றிகரமான ஒன்றாக அமைந்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகளைத் தவிர ஏனைய அனைவரும் இந்த வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெறத் தவறியிருந்தனர்.

எவ்வாறாயினும், பொதுவாக பல பரீட்சார்த்திகள் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடை அளித்திருந்தனர். விடைகளை மதிப்பீடு செய்கையில் பின்வரும் பொதுவான பலவீனங்கள் கண்டறியப்பட்டன.

(1) அதிகமானளவு பரீட்சார்த்திகள் நேரக் கிரயம் மற்றும் தொழிற்சாலை மேந்தலைகள் ஆகியவற்றைச் சரியாக இனங்காண்பதற்குத் தவறியிருந்தனர்.

(2) அதிக எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சரியாக முதன்மைக் கிரயத்தைக் கணிப்பிடு வதில் தோல்வி கண்டிருந்ததன் காரணமாக புள்ளிகளை இழந்திருந்தனர்.

(3) சிலர் செய்கை வேலைகளைக் காட்டாமல் உற்பத்திக் கணக்கில் நேரடியாக எண் பெறுமானங்களை எழுதியிருந்தனர். அந்த எண் பெறுமானங்கள் பிழையாக இருந்திருப்பின் அவர்கள் கணிப்பீட்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த புள்ளிகளை இழந்திருப்பர். உதாரணமாக, நேரக் கிரயம், தேய்மானம் போன்றவை.

(4) சில எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம், உத்தியோகத்தர்களின் சம்பளம் மற்றும் தொழிற்சாலைக் கட்டடம் மீதான தேய்மானம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதில் தோல்வி கண்டிருந்தனர்.

மிகச் சொற்பளவிலானவர்கள் இந்த வினாவின் பகுதி (b) இற்கு விடையளிக்க முனைந்திருந் ததுடன் அவர்களில் பலர் சரியான விடையினை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். இது ஒரு மிகை விலையுடன் பொருட்களை விற்பனைப் பிரிவுக்கு மாற்றுவதன் மீதுள்ள அறிவு மிகக் குறைவாக உள்ளமையைச் சுட்டிக்காட்டுகிறது.

- * * * -